

02.10.2017 அன்று கிண்டி சிறுவர் பூங்காவில் நடைபெற்ற வன உயிரின வார துவக்க விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளித்து பாராட்டினார். இவ்விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர் வா. மைத்ரேயன், எம்.பி. அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ. ஜெயவர்தன், எம்.பி. அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.என். ரவி, எம்.எல்.ஏ. அவர்கள், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப. அவர்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்) முனைவர் ஹி. பசவராஜு, இ.வ.ப. அவர்கள், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக்காப்பாளர் (வனத்துறைத்தலைவர்) திரு. பிரவீன் சந்திர தியாகி, இ.வ.ப. அவர்கள், கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, திரு. சி. யுவராஜ், இ.வ.ப., அவர்கள் மற்றும் வன உயிரினக்காப்பாளர், திருமதி. கௌ. கீதாஞ்சலி, இ.வ.ப., ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தார்கள்.